

(C) 2012 John Sheppard - Distributed by Catholic Online - www.catholic.org

## *புனித இஞ்ஞாசியார் (Laconi) (1701 – 1781)*

இவரது ஞானஸ்நானப் பெயர் பிரான்சிஸ் இஞ்ஞாசி வின்சென்ட், இவர் மெலிந்திருப்பார், முகம் வெளுத்திருக்கும். தம் தந்தையின் நிலத்தில் வேலை செய்து இவருக்கு மிகக் கடினமாயிருந்தது. 17-ஆம் வயதில் இவருக்கு பொல்லாத நோய் வந்தது. சுகம் பெற்றதும் தம்மை புனித அசிசி பிரான்சிசுக்கு கையளிப்பதாக வாக்களித்தார். சுகம் கிடைத்தது. தந்தையோ இவருக்கு அனுமதி அளிக்கவில்லை. “இன்று அல்லது நாளை பார்த்துக் கொள்ளலாம். இந்த ஆண்டில் போனாலும், அடுத்த ஆண்டில் போனாலும் ஒன்றுதான் வாக்குறுதியை உடனே நிறைவேற்றத் தேவையில்லை” என்று தந்தை கூறினார். என்றாலும் இவர் கப்புச்சின் சபையில் துணைச் சகோதரராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். கடவுள் மீதும் மனிதர் மீதும் அன்பு இவரது உள்ளத்தில் அதிகரித்து வந்தது. 1741-ஆம் ஆண்டில் இவருக்கு ஒரு புதிய வேலை கொடுக்கப்பட்டது. அது சந்தியாசிகளுக்கென்று வீடு வீடாய்ப் போய் பிச்சை எடுப்பது. இந்த வேலையை இவர் தம் வாழ்நாளில் எஞ்சிய நாற்பது ஆண்டுகளாக செய்து வந்தார். பிச்சை எடுத்துக் கொண்டு செல்லும்போது நோயாளிகளைச் சந்தித்துத் தேற்றுவார். அறியாதவர்களுக்கு மறைக்கல்வி போதித்தார். செபிக்க பகலில் நேரம் கிடையாது. எனவே இரவில் நெடுநேரம் விழித்திருந்து செபிப்பார். மரக்கட்டையை தலையணையாக வைத்து ஒரு மணிநேரம் அல்லது இரண்டு மணி நேரம் தூங்குவார்.

**சிந்தனை:**

நம்மை அழைத்த கடவுள். நாம் இறுதிவரை நிலைநிற்க ஆவன செய்வார். என்றாலும் நாமும் நம்மால் ஆனதைச் செய்ய வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, உம்மால் எல்லாம் கூடும் நாங்கள் இறுதி வரை நிலைத்திருக்கும் வரம் தாரும்.